(6 Pages) **Reg. No. : ......................................**

**Code No. : 5252** **Sub. Code : ZTLE 11**

M.A. (CBCS) DEGREE EXAMINATION,
NOVEMBER 2021

First Semester

தமிழ் – Elective

நாட்டார் வழக்காற்றியல் அடிப்படைகள்

(For those who joined in July 2021 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மார்க்சின் எழுத்துக்களையும், எங்கல்ஸின் எழுத்துக்களையும் படிப்பவர்கள் எவ்வாறு அழைக்கப்படுவர்?

   (அ) கம்யூனிஸ்ட் (ஆ) மிதவாதி

   (இ) நாட்டார் (ஈ) பிராமணர்

2. வாய்மொழி வழக்காறுகளை எவ்வாறு அழைப்பர்?

   (அ) மனப்படைப்புகள்

   (ஆ) வாய்மொழி இலக்கியங்கள்

   (இ) நாட்டார் வழக்காறுகள்

   (ஈ) இலக்கிய வகைகள்

3. குழந்தைகளைத் தூங்கச் செய்யத் தாய், பாட்டி, அத்தை போன்ற உறவினர் பாடும் பாட்டு எது?

(அ) தாலாட்டு (ஆ) தெம்மாங்கு

(இ) ஒப்பாரி (ஈ) கதைப்பாட்டு

4. பாலட் (Ballad) என்பது எதனைக் குறிக்கும்?

(அ) நாடகம் (ஆ) உரைநடை

(இ) கதைப்பாடல் (ஈ) காப்பியம்

5. தெருக்கூத்தின் வேறு பெயர் என்ன?

(அ) பாவைக் கூத்து (ஆ) கணியான் கூத்து

(இ) கட்டைக் கூத்து (ஈ) வில்லுப்பாட்டு

6. கதையாடல்களின் உள்ளடக்கமும் வழிபாட்டுச் சார்புமுடைய கூத்து எது?

(அ) தெருக்கூத்து (ஆ) கணியான் கூத்து

(இ) கட்டைக் கூத்து (ஈ) வில்லுப்பாட்டு

7. கடலைமாட சாமிக்குச் செய்யப்படும் வழிபாட்டுச் சடங்கு எது?

(அ) குருபூஜை (ஆ) பரண்வெட்டு

(இ) பீட வழிபாடு (ஈ) பிரதோஷம்

8. மந்திர சமய நம்பிக்கை ஒழுங்கு அமைப்பு முறை என்பது யாது?

(அ) உயிரியம் (ஆ) ஆவியியம்

(இ) குலக்குறியியம் (ஈ) காவியம்

9. நாட்டார் வழக்காற்றுக் சேகரிப்பாளர்களால் பொதுவாகப் பயன்படுத்தப்படும அணுகுமுறை எது?

(அ) கள ஆய்வு

(ஆ) நேர்காணல்

(இ) உற்றுநோக்கல்

(ஈ) விளக்குதல்

10. தேவராட்டமும், சேவையாட்டமும் நிகழ்த்துபவர்கள் யார்?

(அ) கம்பளத்து நாயக்கர்கள்

(ஆ) நாடார்கள்

(இ) பார்ப்பனர்

(ஈ) வேளாளர்கள்

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

11. (அ) நாட்டார் வழக்காற்று வடிவங்களின் பட்டியலைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) நாட்டார் வழக்காற்றியல் கலைச்சொற்களை விளக்குக.

12. (அ) நாட்டார் கதைகள் – வரையறை செய்க.

(அல்லது)

(ஆ) நாட்டார் வழக்காற்றுக் கூறுகளில் விடுகதைகள் பெறும் இடத்தை மதிப்பிடுக.

13. (அ) கணியான் கூத்து பெயர்க் காரணத்தை இயம்புக.

(அல்லது)

(ஆ) வில்லுப்பாட்டு ஒரு வழிபாட்டுச் சடங்குக்கலை என்பதை ஆராய்க.

14. (அ) நாட்டார் சமயத்தின் செயல்பாடுகளை வரிசைப்படுத்துக.

(அல்லது)

(ஆ) குலக்குறியியம் – விளக்குக.

15. (அ) கள ஆய்வு என்றால் என்ன? விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) கள ஆய்வு உத்திகள் குறித்து எழுதுக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

16. (அ) நாட்டார் வழக்காறு குறித்த இருபத்தோரு வரையறைகளைப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) வாய்மொழி வழக்காறுகளின் இயல்புகளைப் புலப்படுத்துக.

17. (அ) கதைக்கூறு என்பதை விளக்கிக் கதை வகைகளை வரிசைப்படுத்துக.

(அல்லது)

(ஆ) வாய்மொழி இலக்கிய வகைமைகளை விளக்கிக் கட்டுரை வரைக.

18. (அ) நாட்டார் நிகழ்த்துக் கலைகளில் கரகாட்டம் பெறும் இடத்தை மதிப்பிடுக.

(அல்லது)

(ஆ) நாட்டார் நிகழ்த்துக் கலைகளின் வளர்ச்சி நிலைகளை ஆராய்க.

19. (அ) நாட்டார் வழிபாட்டில் சடங்கியல் நிகழ்த்துதல் எங்ஙனம் அமைகின்றது? விளக்குக.

(அல்லது)

(ஆ) நாட்டார் நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், விளையாட்டுக்கள் குறித்து விவரிக்க.

20. (அ) 'கள ஆய்வு நாட்டார் வழக்காற்றியலின் அடிப்படை' – எனும் கூற்றை நிறுவுக.

(அல்லது)

(ஆ) 'நாட்டார் வழக்காற்றுத் தரவுகளைச் சேகரிப்பதற்கு உற்றுக் கவனித்தல் நல்ல வழிமுறையாகும்' – எனும் கூற்றை நிறுவுக.

————————